**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 10/2024**

2025ம் வருடம் ஜுலை திங்கள் 07ம் நாள் வாதி தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு. V.மனோஜ்குமார், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திருமதி. ஆயிசா கனி (PW1) கிராமம்:
கணவர் பெயர் : அகமது தொழில் :
வயது :

<u>முதல் விசாரணை:–</u>

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். என் தரப்பு வாய்மொழி சாட்சியத்தை எழுத்துமூலமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னுடைய அறிவுக்கு முழுமையாய் தெரிந்த மட்டிலும் உண்மை என்று உறுதி கூறி இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள விபரங்களை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், கமுதி நீதிமன்றத்தில் அ.வ.எண்.33/2015ன் வழக்கு பதிவேட்டின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், கமுதி நீதிமன்றத்தில் அ.வ.எண்.33/2015ன் பிராதின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், கமுதி நீதிமன்றத்தில் அ.வ.எண்.33/2015ல் I.A.No.55/17–ல் மனுதாரர்/வாதியால் கொடுக்கப்பட்ட மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், கமுதி நீதிமன்றத்தில் அ.வ.எண்.33/2015ன் எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. சர்வே எண்.265 உட்பிரிவு 376க்குரிய கத்திசா பீவி பெயரிலான

பட்டாவின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 11.07.2022 ம் தேதியிட்ட பிரதிவாதியானவர் அப்துல்ரகுமான் வகையறாவிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றதற்குண்டான ஆவண எண்.1/1114/2022 ன் கீழான கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 20.09.2019 ம் தேதியிட்ட மாண்புமிகு முதுகுளத்தூர், சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு எண்.130/2017 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(வாதி தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆவணங்களை பரிசீலனை செய்வதற்காக கால அவகாசம் கோரியதன் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது )

(ஒம்./−திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.